முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2017 யூலை

## (AA35) கூட்டிணைப்பு மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate and Personal Taxation)

2017-07-16
பிற்பகல்
[1.45 – 5.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்களின் எண்ணிக்கை: 09
வினாக்களின் எண்ணிக்கை: 09

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும், கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்..*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**வரையறுக்கப்பட்ட ரக் (தனி) கம்பனி,** 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2016 சனவரி 01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதுடன் அதே தினத்தில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இலங்கையில் கம்பனி ஒன்றின் வதிவிட அந்தஸ்தைத் தீர்மானிப்பதற்கு ஏற்புடைய விதியினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **வரை. ரக் (தனி) கம்பனியின்** 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமானவரித் திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட ஆலோக்க (தனி) கம்பனி** இலத்திரனியல் உபகரணங்களை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.

கம்பனியின் பதிவேடுகளிலிருந்து 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன :

(1) கம்பனியின் விற்பனைப் புரள்வு பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| கம்பனியால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை | 4,600,000 |
| கம்பனியால் உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை | 2,340,000 |
| | **6,940,000** |

(2) கம்பனியால் செலுத்தப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (தே.க.வ. NBT) பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது | 32,800 |
| உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மீது | 12,500 |

(3) 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக மாதாந்தக் கட்டணங்களாகச் செலுத்தப்பட்ட தே.க.வரி ரூ. 20,000/-.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2016 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்தப்படவேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் மீதித் தொகையை **மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**சுவ திவி பவுண்டேசன்** ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும் (NGO). இது கிராமிய சமூகத்தின் வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றும் நோக்குடன் சுகாதாரத்தில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி வருகின்றது.

2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சாரம் பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| வெளிநாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட உபகாரக் கொடுப்பனவுகள் | 1,440,000 |
| நிலையான வைப்பிலிருந்து பெறப்பட்ட வட்டி (நிறுத்திவைத்தல் வரி 8% கழிக்கப்பட்டது) | 46,000 |
| வளவாளர்களுக்கான கட்டணம் | (840,000) |
| நிர்வாகச் செலவுகள் | (570,000) |
| **ஆண்டிற்கான மேலதிகம்** | **76,000** |

**நீங்கள் செய்யவேண்டியது :**

2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கு **சுவ திவி பவுண்டேசனது** வருமானவரிப் பொறுப்பினை **மதிப்பிடுக.**

(05 புள்ளிகள்)

## வினா 04

கொழும்புப் பகுதியில் ஹாட்வெயார் பொருட்களின் மொத்த, சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் **AA பங்குடமையில் அஹமட்** ஒரு பங்காளராவார். அவர் தனது வரிப் பொறுப்பினைக் குறைப்பதற்கான சில வழிமுறைகளை மதிப்பீடு செய்துகொண்டிருக்கிறார். **AA பங்குடமையிலிருந்து** பெறப்படும் இலாபப் பங்கினை அவரது ஐந்து மகன்மாருடன் பகிர்ந்துகொள்வதற்கான உடன்படிக்கையொன்றைச் செய்யுமாறு **அஹமட்டுக்கு** அவரது நண்பனால் ஆலோசனை வழங்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

வரித் தேவைகளுக்காக இலாபப் பங்கு முழுவதையும் **அஹமட்டினது** வருமானமாகக் கருதலாமா என்பதை டாவூட்போய் எதிர் ஆணையாளர் நாயகம் (*Davoodbhoy Vs CGIR)* என்ற வழக்கின் தீர்ப்பைத் துணையாகக் கொண்டு **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

மென் விளையாட்டுப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள **வரையறுக்கப்பட்ட ரோசி (தனி) கம்பனி** பெறுமதிசேர் வரிக்கு (பெ.சே.வ. VAT) பதிவுசெய்யப்பட்ட கம்பனியாகும். கம்பனியின் பதிவேடுகளிலிருந்து 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன :

(1) விற்பனை (பெ.சே.வ. தவிர்த்து) :

| | |
|---|---|
| நேரடி ஏற்றுமதி (USD 1 = ரூ.150/-) | USD 14,500/- |
| உள்ளூர் வாடிக்கையாளர்களுக்கான விற்பனை | ரூ.5,325,000/- |

(2) கணினிகள் விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை ரூ. 300,000/-.

(3) செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரி :

| | ரூ. |
|---|---|
| இறக்குமதிசெய்யப்பட்ட மூலப்பொருட்களின் | 636,000 |
| உள்ளூர் கொள்வனவுகளில் | 244,000 |
| CEO பாவித்த மோட்டார் காருக்கான காப்புறுதிக் கட்டணத்தில் | 42,000 |

(4) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட மேலதிக உள்ளீட்டு வரித் தொகை ரூ.24,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கு பெறுமதிசேர் வரியாகச் செலுத்தவேண்டிய மீதிவரி / மேலதிகக் கொடுப்பனவை **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## வினா 06

தகரத்தில் மீன்களை அடைத்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள **வரையறுக்கப்பட்ட சயுறா புரொடக்ஸ் (தனி) கம்பனியின்** பின்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

(1) சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விபரம் :

| | **2014.04.01 இல் கொண்டுசெல்லும் பெறுமதி (தேறிய புத்தகப் பெறுமதி) (ரூ.)** | **வருடப்பகுதியிலான சேர்த்தல்கள் (ரூ.)** | **வருடத்திற்கான பெறுமானத்தேய்வு (ரூ.)** | **2015.03.31 இல் கொண்டுசெல்லும் பெறுமதி (தேறிய புத்தகப் பெறுமதி) (ரூ.)** |
|---|---|---|---|---|
| காணி | - | 1,000,000 | - | 1,000,000 |
| கட்டடம் | 2,650,000 | - | 265,000 | 2,385,000 |
| கணினிகள் | 525,000 | 345,400 | 131,250 | 739,150 |
| உபகரணம் | 236,000 | 155,000 | 35,400 | 355,600 |
| இயந்திரங்கள் | 2,430,000 | - | 303,750 | 2,126,250 |
| மோட்டார் கார் | - | 1,600,000 | - | 1,600,000 |
| | **5,841,000** | **3,100,400** | **735,400** | **8,206,000** |

கம்பனியின் கொள்கைப்படி, சொத்துக்கள் கொள்வனவுசெய்யப்பட்ட வருடத்தில் பெறுமானத்தேய்வு விதிக்கப்படவில்லை.

(2) 2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமானவரிக் கணிப்பீட்டின் சுருக்கம் :

| | **ரூ.** |
|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | 15,678,000 |
| கூட்டு : அனுமதிக்கப்படாத செலவுகள் | 6,520,000 |
| கழி : அனுமதிக்கத்தக்க செலவுகள் | 4,563,000 |
| வரி நோக்கத்திற்கான திருத்திய இலாபம் | 17,635,000 |
| **செலுத்தவேண்டிய மொத்த வருமான வரி** | **4,937,800** |

(3) 2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்கான இலாபத்திலிருந்து கம்பனி 2015 சனவரி 31 ஆந் திகதி இடைக்காலப் பங்கிலாபமாக ரூ. 500,000/- செலுத்தியிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) 2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்கு கம்பனியின் பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம் (Distributable profit) (05 புள்ளிகள்)

(b) 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்குச் செலுத்தவேண்டிய பகிர்ந்தளிக்கத்தக்க இலாபத்தின் மீதான வரியை (கருதப்பட்ட பங்கிலாப வரி -Deemed Dividend Tax) தவிர்ப்பதற்காக பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய குறைந்தளவு தொகை. (02 புள்ளிகள்)

(c) 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கான பகிர்ந்தளிக்கத்தக்க இலாபத்தின் மீதான வரி (கருதப்பட்ட பங்கிலாப வரி). (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**மொடேர்ன் லுக்** பங்குடமையானது ஆடைகளை இறக்குமதிசெய்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. **மொடேர்ன் லுக்** பங்குடமையின் பங்காளர்களான **டேவிட்** மற்றும் **எட்வேட்** இலாப, நட்டங்களைச் சமமாகப் பங்கிடுவதற்கும் மூலதனத்திற்கு மேலதிகமாக வியாபாரத்திற்கு பங்காளர்களால் வழங்கப்பட்ட நிதிக்காக 5% வீதவட்டியைச் செலுத்துவதற்கும் உடன்பட்டனர். 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது :

| | ரூ. |
|---|---|
| விற்பனைப் புரள்வு | 12,380,940 |
| விற்பனைக் கிரயம் | (7,780,000) |
| **மொத்த இலாபம்** | **4,600,940** |
| ஊழியர்களுக்கான சம்பளம் | (540,000) |
| சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு | (236,000) |
| பாவனைக் கட்டணங்கள் | (45,000) |
| **டேவிட்** வழங்கிய கடனுக்கான **வட்டி** | (56,000) |
| எழுதுகருவிகள் | (12,000) |
| **தேறிய இலாபம்** | **3,711,940** |

கீழேயுள்ள மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) **டேவிட்டின்** மனைவி **ரோஸ் மொடேர்ன் லுக்கின்** நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றுவதுடன் **ரோஸின்** மாதாந்தச் சம்பளம் ரூ. 20,000/- ஆகும். **ரோஸிற்கு** செலுத்தப்பட்ட சம்பளம் ரூ. 240,000/- ஊழியர்களுக்கான சம்பளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(2) வரித் தேவைகளுக்காக 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கான சொத்துக்கள் மீதான பெறுமானத் தேய்வு ரூ. 96,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) பங்குடமையின் பிரிபடத்தக்க இலாபத்தைக் **கணிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(b) பங்குடமையின் வருமானவரிப் பொறுப்பைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) பங்குடமையிலிருந்து பங்காளர்கள் பெற்றுக்கொள்ளும் இலாபம் மற்றும் ஏனைய வருமானங்களின் பகிர்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட றிச் பூட் (தனி) கம்பனி** 2000 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட வதிவுள்ள கம்பனியாகும். அது உள்ளூர்ச் சந்தைக்கு குக்கீஸ் உற்பத்திசெய்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. கம்பனி **வரையறுக்கப்பட்ட ஸ்டார் பொதுக் கம்பனியின் (Star PLC)** துணைநிலைக் கம்பனி ஒன்றாகும் (Subsidiary). **வரையறுக்கப்பட்ட றிச் பூட் (தனி) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

(1) 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றுக்களின் சாரம் பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| விற்பனைப் புரள்வு – உள்ளூர் விற்பனை | 538,310,000 |
| விற்பனைக் கிரயம் | (290,687,200) |
| **மொத்த இலாபம்** | **247,622,800** |
| **ஏனைய வருமானம் :** | |
| இயந்திர விற்பனையில் இலாபம் | 340,000 |
| பெறப்பட்ட பங்கிலாபம் (தேறியது) | 108,000 |
| நிர்வாகச் செலவுகள் | (94,776,000) |
| விநியோகச் செலவுகள் | (24,650,000) |
| நிதிச் செலவுகள் | (8,549,000) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **120,095,800** |

(2) நிர்வாகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது :

- **வரை. ஸ்டார் பொதுக் கம்பனிக்குச்** செலுத்தப்பட்ட முகாமைக் கட்டணம் ரூ. 4,036,000/-.
- இடம்பெயர்ந்த முதியோருக்கு நிறுவனமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அற நிறுவனத்திற்கான நன்கொடை ரூ. 1,000,000/-
- ஊழியர் ஒருவரிடமிருந்து வருமதியாகவிருந்த மீதி ரூ. 75,000/- பதிவழிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக கடன்பட்டோரிடமிருந்தான ஐயக் கடன்கள் தொடர்பாக ரூ. 25,000/- பொது ஏற்பாடு செய்யப்பட்டது.
- வருடத்திற்கான ஓய்வுப் பணிக்கொடை ஏற்பாடு ரூ. 543,000/-.
- கம்பனி 2014 யூலை 01 ஆந் திகதியிலிருந்து ஐந்து (5) வருட காலத்திற்கு வாடகை ஒப்பந்தமொன்றைச் செய்திருந்தது. மாத வாடகை ரூ. 26,000/- ஆவதுடன் வருடத்திற்கான வாடகைச் செலவு வருமானக் கூற்றுக்கு தாக்கல் செய்யப்பட்டது.

(3) விநியோகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது :

- மொத்த விளம்பரச் செலவு ரூ. 760,000/-. அத்தொகையில் ரூ. 500,000/- வெளிநாட்டு வாடிக்கையாளர்களைக் கவருவதற்காக இலங்கைக்கு வெளியே செலவிடப்பட்டது.
- வியாபாரப் பேச்சுவார்த்தைகளுக்காக வருகைதந்த சில வாடிக்கையாளர்களுக்கான உபசரணைச் செலவு ரூ. 265,500/-.

(4) வரிவரவுக் கோரிக்கைக்கான காலம் கடந்த காரணத்தால் பதிவழிக்கப்பட்ட பொருளாதார சேவைகள் கட்டணம் (ESC) ரூ. 4,000,000/- நிதிச் செலவுகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(5) ஏனைய எல்லாச் செலவுகளும் வருமானவரித் தேவைக்காக இடமளிக்கப்படக்கூடியனவாகும்.

(6) ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விபரங்கள் பின்வருமாறு :

**கிரயம்**

| விபரம் | 2015.04.01 இல் மீதி (ரூ.) | சேர்த்தல்களின் கிரயம் (ரூ.) | விற்பனை (ரூ.) | 2016.03.31 இல் மீதி (ரூ.) |
|---|---|---|---|---|
| கட்டடம் | 15,000,000 | - | - | 15,000,000 |
| இயந்திரம் | 21,500,000 | 4,675,000 | (3,850,000) | 22,325,000 |
| கணினிகள் | 1,450,000 | 320,000 | - | 1,770,000 |
| மோட்டார் வாகனம் | 5,650,000 | 2,600,000 | - | 8,250,000 |
| தளபாடம் | 1,240,000 | 124,000 | - | 1,364,000 |
| **மொத்தம்** | **44,840,000** | **7,719,000** | **(3,850,000)** | **48,709,000** |

**பெறுமானத்தேய்வு**

| விபரம் | 2015.04.01 இல் மீதி (ரூ.) | வருடத்திற்கான ஒதுக்கம் (ரூ.) | விற்பனை (ரூ.) | 2016.03.31 இல் மீதி (ரூ.) |
|---|---|---|---|---|
| கட்டடம் | 6,750,000 | 750,000 | - | 7,500,000 |
| இயந்திரம் | 10,750,000 | 2,232,500 | (1,540,000) | 11,442,500 |
| கணினிகள் | 1,015,000 | 354,000 | - | 1,369,000 |
| மோட்டார் வாகனம் | 2,542,500 | 1,237,500 | - | 3,780,000 |
| தளபாடம் | 1,116,000 | 136,400 | - | 1,252,400 |
| **மொத்தம்** | **22,173,500** | **4,710,400** | **(1,540,000)** | **25,343,900** |

(7) வருட காலப்பகுதியில் உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்ட இயந்திரமொன்று கம்பனியால் விற்பனை செய்யப்பட்டது. இது 2011 மே மாதத்தில் ரூ. 3,850,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாகும். விற்பனையால் பெறப்பட்ட முழுத் தொகையையும் உபயோகித்து பழைய இயந்திரத்திற்குப் பிரதியீடாக புதிய இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

(8) மோட்டார் வாகனங்களுக்கான சேர்த்தலானது முகாமைப் பணிப்பாளரின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் காரினைக் குறிப்பிடுகிறது.

(9) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்த சொத்துக்களில் விற்பனை செய்யப்பட்ட இயந்திரம் மற்றும் கட்டடம் தவிர்ந்த ஏனையவற்றிற்கு, வரி நோக்கத்திற்காக பெறுமானத்தேய்வு விடுதொகை பூரணமாகக் கோரப்பட்டுள்ளது. கட்டடம் 2005 மே மாதத்தில் கட்டப்பட்டதாகும்..

(10) வருட காலப்பகுதியில் ஓய்வூதியப் பணிக்கொடையாக எவ்வித கொடுப்பனவும் செய்யப்படவில்லை.

(11) 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்காகச் செலுத்தப்பட்ட வருமானவரி சுயமதிப்பீட்டுக் கொடுப்பனவு ரூ.12,000,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கு பின்வருவனவற்றை **மதிப்பிடுக.** :

(a) மொத்த நியதிச்சட்ட வருமானம்

(b) வரி மதிக்கத்தக்க வருமானம்

(c) வரி விதி வருமானம்

(d) செலுத்தவேண்டிய மொத்த வருமான வரி

(e) செலுத்தவேண்டிய மீதி வரி

**மு.கு.:** ஏதேனும் கிரயங்கள் அனுமதிக்கப்படுவதற்கான அல்லது அனுமதிக்கப்படாமைக்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

## வினா 09

வதிவுள்ள தனியாளான **ரம்யா** நிதிக் கம்பனியொன்றில் பிரதம சட்ட அலுவலராகக் கடமையாற்றுகிறார். அவர் 2012 இல் தனது கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக்கொண்டதுடன், 2006 யூன் 29 இல் பிறந்த அவர்களுடைய மகள் **சனுதி** தாயுடன் வாழ்வதோடு அவரால் பராமரிக்கப்பட்டும் வருகிறாள். 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கான (இதன் பின்பு வருடம் எனக் குறிப்பிடப்படும்) **ரம்யா** தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) அவர் மொத்தச் சம்பளமாக மாதாந்தம் ரூ. 200,000/- பெற்றுக்கொண்டார்.

(2) அவரது அலுவலக மற்றும் தனிப்பட்ட பாவனைக்காக மோட்டார் கார் (1,300 CC) ஒன்று சாரதி மற்றும் எரிபொருளுடன் வழங்கப்பட்டதுடன் அவர் தனிப்பட்ட பாவனைக்கான செலவினை தொழில்தருநருக்குச் செலுத்தவில்லை. கம்பனியும் இக்காரின் ஓட்டம் தொடர்பான பதிவுகளைப் பேணுவதில்லை.

(3) கம்பனி அவரது கைத்தொலைபேசிக் கட்டணங்களைப் பொறுப்பதுடன் வருட காலப்பகுதியில் ரூ.32,000/- மீள்கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டது.

(4) கம்பனி மருத்துவத் திட்டமொன்றைக் கொண்டுள்ளதுடன் வருட காலப்பகுதியில் அவரது மகளின் மருத்துவச் செலவுக்காக ரூ. 140,000/- இனை மீள்கொடுப்பனவாகச் செலுத்தியது.

(5) வருடத்திற்காகக் கழிக்கப்பட்ட உ.பொ.செ.வரி (PAYE) ரூ. 168,960/- ஆகும்.

(6) அவரால் கொள்வனவு செய்யப்பட்ட மாடிக்குடிமனையில் அவர் தனது மகளுடன் வசிக்கிறார். அந்த மாடிக்குடிமனையின் சோலைவரி மதிப்பீடு ரூ. 240,000/- ஆவதுடன் சோலைவரி 30% இல் செலுத்தப்பட்டது.

(7) தனது காலஞ்சென்ற தந்தையிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொண்ட வீட்டினை ரூ. 35,000/- மாதாந்த வாடகைக்குக் கொடுத்துள்ளார். வருட காலப்பகுதியில் **ரம்யாவினால்** திருத்த வேலைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 265,000/- ஆகும். வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூ.160,000/- ஆவதுடன் சோலைவரி 20% இல் செலுத்தப்பட்டது.

(8) நிலையான வைப்பிலிருந்து பெறப்பட்ட வட்டி ரூ. 250,000/- ஆவதுடன் வட்டி மீது 2.5% இல் நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட்டிருந்தது.

(9) **சனுதி** சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்கொன்றை வைத்திருப்பதுடன் வருடத்திற்கான மொத்த வட்டி வருமானமாக ரூ. 18,000/- பெற்றுக்கொண்டார்.

(10) **ரம்யா** தனது நண்பர் ஒருவருக்கு ரூ. 100,000/- கடன் கொடுத்திருந்ததுடன் வருட காலப்பகுதியில் கடன் மீள் கொடுப்பனவாக ரூ. 120,000/- பெற்றுக்கொண்டார்.

(11) வருட காலப்பகுதியில் அவர் லொத்தர் ஒன்றிலிருந்து வெற்றிபெற்ற பணப்பரிசு ரூ. 400,000/- ஆகும். லொத்தர் பரிசிலிருந்து ரூ. 50,000/- அப்பி வெனுவென் அப்பி (நமக்காக நாம்) நிதியத்திற்கு நன்கொடை வழங்கப்பட்டது.

(12) **ரம்யா** தான் வாடகைக்குக் கொடுத்த வீட்டின் திருத்தத்திற்காக தனது வங்கியிலிருந்து ரூ. 200,000/- கடன் ஒன்று எடுத்திருந்தார். அவர் வருட காலப்பகுதியில் கடனுக்காக ரூ. 22,250/- மற்றும் ரூ.75,750/- தொகைகளை முறையே வட்டியாகவும் கடன் மீள்கொடுப்பனவாகவும் செலுத்தியிருந்தார்.

(13) கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நோயாளர் விடுதியொன்றை மீள வர்ணம் தீட்டுவதற்காக ரூ.50,000/- பெறுமதியான வர்ணங்களை (paint) நன்கொடையாக வழங்கினார்.

(14) சுய வரிமதிப்பீட்டு அடிப்படையில் செலுத்தப்பட்ட வரி ரூ. 20,000/-.

மேற்படி தகவல்களிலிருந்து,

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கு **ரம்யாவுக்குப்** பின்வருவனவற்றை **மதிப்பிடுக.**

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்தவேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்தவேண்டிய மீதி வரி

(d) வரிவிலக்கு வருமானம் ஏதேனும் இருப்பின். (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |